RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2533

# ஐங்குறுநூற்றில் முல்லை நிலம்

**கு. சிந்து** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641014.

# The Characteristics of the Mullai Thinai in Ainkurunuru

**K. Sindhu** [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore-641014, India

* Corresponding Author: sindhu@psgcas.ac.in

**ABSTRACT**

Sangam poets, whose works derive their vitality from human actions and emotional experiences, regarded nature as an indispensable element in poetic expression. Sangam literature presents nature not merely as a physical setting but as an integral companion to human life and emotions. Just as the background of a painting or a dramatic performance enhances its central theme, landscapes such as mountains, forests, agricultural fields, and seashores serve as meaningful backdrops for depicting various aspects of human life in literary works. Inspired by the natural world they observed, Sangam poets skillfully transformed these landscapes into vivid poetic settings that enriched the beauty and depth of their compositions. Their literary vision emphasizes the inseparable relationship between the land, its natural features, and human life. In this context, the present study examines the distinctive features of the Mullai landscape as represented in Ainkurunuru, with particular reference to the concepts of Muthal (primary landscape), Karu (associated environmental elements), and Uripporul (human emotions and actions), which together constitute the structural framework of Sangam Akam poetry.

**Keywords:** Sangam poets, Ainkurunuru, Sangam Akam poetry, Tamil landscape

## முன்னுரை

மனிதனின் வினைநிகழ்ச்சியும், மன நெகிழ்ச்சியும் கவிதைக்கு உயிர்ப் பொருளாகக் கொண்ட சங்க இலக்கியப் புலவர்கட்கும் இயற்கைத் தலையாய துணைப் பொருளாக உதவியுள்ளது. இயற்கையை மனிதனின் துணைமைப் பொருள்களாகக் காணுவது சங்க இலக்கியம். ஓர் ஓவியம் அல்லது நாடகக் காட்சியில் கருத்து விளக்கமாகப் பின்புலம் தீட்டப்பெறுதல் போல இலக்கியங்களில் வாழ்வியலை விளக்க மலை, காடு, கழனி, கடற்கரைக் காட்சிகள் பின்புலமாகின்றன. சங்கப் புலவர்கள் தாங்கள் கண்ட காட்சிகளைப் பின்புலமாக்கி அழகும் பொலிவும் பொங்கப்படைக்கின்ற கலையுள்ளம் கொண்டவர்கள். நிலம், நிலத்தில் கிளைத்தெழும் பொருட்கள் மனித வாழ்வியல் இவை மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிய இயலாத கட்டுக்கோப்புகளாக அமைவன என்று காட்டுவது அவர்கள் நோக்கமாகிறது. இத்தகையப் பின்புலக் காட்சிகளை மையமாகக் கொண்ட முதல், கரு, உரிப்பொருட்கள் அடிப்படையில் ஐங்குறுநூற்றில் இடம் பெற்றுள்ள முல்லை நிலத்தின் சிறப்பினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முல்லை - விளக்கம்

முல்லை என்பது அழகான வெண்ணிற மலரைக் குறிக்கும் பெயராகும். இச்சொல் இம்மலர் மிகுதியாகக் காணப்படும் காட்டை அல்லது நிலத்தையும் குறிக்கும். அது மலரும் பருவம், பொழுது ஆகியவற்றின் தொடர்பில் அடிக்கடி குறிக்கப்பெறும் இச்சொல் இந்நிலத்தின் பாடல்களையும் குறிக்கும். முல்லை நிலம் சிறப்புக்குரியது என்பதை மு.வ.அவர்கள் "மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்து நாகரிகத்தை வளர்ப்பதற்கு ஏற்றது நிலப்பகுதி என்றும் அங்கு வாழ்க்கை துன்பமாகத்

தோன்றாமல் பொழுதுபோக்காகத் தோன்றக்கூடிய வகையில் இயற்கை மனிதனுக்குத் துணை செய்கின்றது என்றும் ஆதலின் கவலை குறைந்த இனியவாழ்க்கை முல்லை நிலத்தில் அமைந்திருக்கிறது என்றும் புலப்படுத்துவர்"60 அறிஞர் பெருமக்கள். வாழ்வியலின்பம் முல்லைத்திணைப் பாடல்களில் அருமையான முறையில் வைக்கப்பட்டுள்ளது. கோடையில் இலையுதிர்கின்ற மரஞ்செடி கொடிகள் கார்ப்பருவத்தில் தான் தளிர்த்துப் புத்துயிர் பெறுகின்றன. முல்லை நிலம் குறித்த செய்திகள் ஐங்குறுநூற்றில் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

"நறும்பூந் தண்புறவு அணிந்த

குறும்பல் பொறைய நாடுகிழவோனே" (ஐங்குறுநூறு -404)

என்ற பாடலில் நறுமலர்கள் பலவும் விளங்க அழகுபெறும் குளிர்ச்சியான முல்லைநிலத்தில் மேவும் குறுமலைகளுக்கு உரியவன் தலைவன் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. மேலும் புறவணி நாடன் (ஐங். 405) போதார் புறவின் நாடு கிழவோன் (ஐங்.406) மென்புல வைப்பின் நாடு கிழவோன் (407) பூவணி கொண்டன்றால் புறவே (ஐங். 412) நன்னுதல் நாறும் நறுந்தண் புறவின (413)நாம் உள்ளிய புறவே (415) கவினிப் புறவில் (ஐ.நா.416) புறவே பலவுடன் (ஐங்.417) புறவு அணிநாடன் (424) கான் கெழு நாடன் (ஐங். 430) போன்ற பாடல் வரிகள் வாயிலாக முல்லைநிலம் குறித்துச் சங்ககாலப் புலவர்கள் எடுத்தாண்டுள்ள முறையானது தெளிவுபடுகிறது. இதில் முல்லை நிலத்தைக் குறிப்பதற்காக 'புறவு' என்ற சொல்லே மிகுந்த இடங்களில் கையாளப்பட்டுள்ளது. "இலக்கியம் அழகாக இருப்பதற்காகப் படைக்கப்படுவதில்லை அதன் குறிக்கோளில் வெற்றியடைவதில் அது அழகு பெறுகின்றது" என்பர் திரு ஆபர் குரோம்பு.

இக்கருத்து முல்லைத்திணைப் பாடல்களுக்குப் பெரிதும் பொருந்தும் முல்லைத் திணைப் பாடல்களில் பல காட்சிகள் கூறியது கூறலாகத் திரும்பத்திரும்ப வருகின்றன என்றும் அத்தகைய விளக்கங்களைச் சொற்சுவை, பொருட்சுவை கனியும் வகையில் அளிக்கும்போது அதே காட்சிகள் பல்வேறுபட்ட கோலம் வழங்குவன போல அருமைப்பாடு உடையனவாய்ப் பொலிகின்றன.

## முல்லைப்பொழுது

"காரும் மாலையும் முல்லை" கார்காலமும், மாலைப்பொழுதும் முல்லைத் திணைக்குரிய காலமாகும். கார் ஆவது மழைப் பெய்யும் காலம் அஃது ஆவணித் திங்களும், புரட்டாசித் திங்களும், மாலை என்பது இராப்பொழுதின் முற்கூறு.

"ஆர்குரல் எழிலி அழிதுளி சிதறிக்

கார் தொடங்கின்றால்" (ஐங்குறுநூறு -411)

"மஞ்சை ஆலக்கார் தொடங்கின்றால்" (ஐங்குறுநூறு -413)

"முல்லை நிலக்காடு கார்காலத்தில்

எழிலினை வரவேற்றது" (ஐங்குறுநூறு -417)

போன்ற பாடல் அடிகளில் கார்காலம் குறித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

"வேனிற் காலத்தில் ஆலங்கட்டி மழை பொழிவது" (ஐங்குறுநூறு -437)

என்றும், கார்கால வரவினை அறிவிக்கும் பொருட்டு

"அவல் தொறும் தேரை தெவிட்ட மிசைதொறும்

வெங்குரற் புள்ளினம் ஒலிப்ப உதுக் காண்

கார்தொடங்கின்றாற் காலை" (ஐங்குறுநூறு -453)

நீர் நிரம்பிப் பள்ளங்களில் தேரைகள் ஒலிக்க, மரங்களின் உச்சியிலிருந்து பறவை இனங்கள் ஒலிக்க கார்ப்பருவம் தொடங்கியது என்ற பாடல் தெளிவுப்படுத்துகிறது.

"பெய்பனி நலிய" (ஐங்குறுநூறு -457)

"ததையிலை வாழைமுழுமுதிர் அசைய" (ஐங்குறுநூறு -460)

"வான்பிசிர்க் கருவியிற் பிடிவு முகைதகையக்

கான் பிசிர் கற்பக்கார் தொடங்கின்றே" (ஐங்குறுநூறு -468

போன்ற பாடல் அடிகள் கார்காலத்தின் சிறப்பினை எடுத்துரைக்கின்றன.

“மாலை முன்றில்” (ஐங்குறுநூறு -410)

“மாலை வெண்காழ் காவலர் வீச” (ஐங்குறுநூறு -421)

என்ற பாடல் அடிகள் மாலை நேரத்தில் மக்களின் செயல்முறைகளை விளக்குகின்றன.

வினைமேற் சென்ற தலைவனை எண்ணி வருந்தும் தலைவியானவள் மேகங்கள் மிகுந்து இடிமுழக்கம் செய்து மழை பொழிந்து பசுமையான கொடிகளையுயை முல்லைப்பூ அரும்புகளைத் தோற்றுவித்து கார்ப்பருவம் வந்தது (ஐங். 476) என்று குறிப்பிடுவதன் வாயிலாக கார்காலத்தின் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## ஐங்குறுநூற்றில் முல்லை நிலத்தில் அமைந்த பெயரீடுகள்

ஐங்குறுநூற்றுப் பாடல்களில் முதற்பொருளால் அமைந்தவை இளவேனிற் பத்தும், புறவணிப்பத்துமாகும்.

இளவேனில் பத்தில் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லும் தலைவன் இளவேனில் பருவத்தில் திரும்பி வருகிறேன் என்று கூறிப் பிரிகிறான். இளவேனிற் பருவம் வந்துவிட்டது. ஆனால் தலைவன் வரவில்லை இதனால் வருத்தமுற்றத் தலைவி இரங்கிக் கூறுவதாக, பத்துப் பாடல்களும் அமைந்துள்ளன. இதில் முதற்பொருளான இளவேனிற் பருவம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இளவேனிற் பருவத்தில் குயில் பெட்டையானது இனிய குரல் எழுப்பித் தன்னுடைய துணையைக் கூவி அழைத்தது. அப்போது நுண்மையான மணலை அலைக்கும் காற்று வீசும் இளவேனிற் காலம் வந்த பின்னரும் நம் காதலர் வரவில்லையே என்று தலைவி வருந்திக் கூறும் செய்தி இடம் பெற்றுள்ளது.(ஐங்.341) மேலும்,

“கோங்கை மலர்கள் மலர்ந்து

மணம் வீசும் இளவேனிற் பருவம” (ஐங்குறுநூறு -343)

“பாதிரிமரம் பூத்துக் குலுங்க

கருங்குயில் கூவிமகிழும் இளவேனிற் பருவம்” (ஐங்குறுநூறு -346)

“பொரிபோலும் புங்கமரத்தளிர்கள் விளங்கும்

இளவேனிற் பருவம்” (ஐங்குறுநூறு -347)

இவ்வாறு இளவேனிற் பருவத்தின் சிறப்பானது பத்துப் பாடல்களிலும் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

புறவணிப்பத்து குறித்துப் பொ.வே.சோமசுந்தரனார்

“காடும் காடு சார்ந்த நிலனுமாகிய முல்லைநிலம்

தனக்குரிய கார்பருவத்தே அழகுற்று திகழ்வதனை

நுதலிவரும் ஒரு பத்துப் பாட்டின் தொகுதி என்பதாம்”

என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

புறவு - முல்லை நிலம், அணி - அழகு இதனை மையமாகக் கொண்டு ஐங்குறுநூற்றில் கார்காலத்தில் தலைவர் மனையிடத்தில் இருந்து தலைவியோடு கூடி மகிழ்ந்த பின்பு தவிர்க்க இயலாத நிலையில் புறத்தே சென்று வினைமேற் கொள்ளுதலும் உண்டு. அத்தன்மையில் தலைவன் புறத்தே செல்ல ஆற்றாது தனித்து இருக்கும் தலைவி வருந்தியநிலையில் அவளை ஆற்றுவிக்கும் பொருட்டு தோழியானவள் தலைவன் சென்ற பருவம் கார்காலம் ஆதலால் அவன் சென்ற வழியும் நன்றாகவே அமையும் என்று ஆறுதல் கூறுகின்றாள-;. அதாவது தலைவன் சென்ற வழியில்

“அணிநிற இரும்பொறை மீமிசை

மணிநிற உருவின தோகையும் உடைத்தே” (ஐங்குறுநூறு -431)

அதாவது அழகிய நிறம் பெற்றுள்ள பெரியமலையில் நீலமணி போன்ற மயில்கள் கொண்டு விளங்கும் வழி ஆதலால் தலைவன் சென்ற பாதை நலன்கள் விளங்குவதாக அமையும். அங்கு “பாதை முழுக்க பொன்போன்ற கொன்றைமலர் நிறைந்து இருக்கும்” (ஐங். 432) காதலர் சென்ற வழியில் நீர் மேகங்கள் நிறைந்து காணப்படும்(ஐங். 433) மேலும் அவ்வழியில் நெய்தல் மலரும், கொன்றை மலரும், பிடவமலரும் மலர்ந்து அழகுற அமையும் (ஐங்.435) அவ்வழியின் பாதையில் மணம் கமழும்

தோன்றியும், முல்லைமலர்களும் நிறைந்திருக்கும் (ஐங். 440) என்றும் கூறி தலைவியைத் தேற்றுகின்றாள்.

இவ்வாறு ஐங்குறுநூற்றில் இளவேனிற் பத்து, புறவணிப்பத்து ஆகிய இரு பத்துக்களும் முதற்பொருளின் அடிப்படையில் அமைந்த பெயரீடுகளாகும்.

"வேனிற்காலத்தில் ஆலங்கட்டி மழை பொழிவது" (ஐங்குறுநூறு -437)

"கார் செய் காலை" (ஐங்குறுநூறு -451)

"கறங்கு குரல் எழிலிகார்" (ஐங்குறுநூறு -452)

"கார்தொடங்கின்றாற் காலை" (ஐங்குறுநூறு -453)

போன்ற பாடல் அடிகள் கார்காலத்தின் சிறப்புகளை எடுத்துரைக்கின்றன.

## சிறுபொழுது

"மாலை முன்றில்" (ஐங்குறுநூறு -410)

"மலைவெண் காழ் காவலர் வீச" (ஐங்குறுநூறு -421)

என்ற பாடல்கள் மாலைநேரத்தில் மக்களின் செயல்முறைகளை விளக்குகின்றன.

வினைமேற் சென்ற தலைவனை எண்ணித் தலைவியானவள் மேகங்கள் மிகுந்து இடிமுழக்கம் செய்து மழைபொழிந்து பசுமையான கொடிகளையுடைய முல்லைப்பூ அரும்புகளைத் தோற்றுவித்து கார்ப்பருவம் வந்தது. (ஐங்.476) என்று கூறுவதன் மூலம் கார்ப்பருவத்தின் சிறப்பானது எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

ஐங்குறு நூற்றுப் பாடல்கள் அனைத்தும் இயற்கையின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளன. சங்கப்புலவர்கள் இயற்கை அறிவு மிக்கவர்கள். அவர்கள் அகம் பாடினாலும் புறம் பாடினாலும் இயற்கை சூழலின் செயல்பாடுகளை மனித உணர்வுகளோடு ஒன்றித்துப் பாடுவர். இந்நிலையில் ஐங்குறு நூற்று முல்லை நிலத்தில் இடம்பெற்றுள்ள செய்திகளை ஆராயும்போது சங்க்கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது. முல்லை நிலம் நாகரிகத்தின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது என்பதையும் உய்த்துணரலாம்.

## References

தொல்காப்பிம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா 49 - 52, உவமயியல் நூற்பா 24-33இ பொருளியில் நூற்பா 33இ 34இ 37

தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 1176

ஆ. இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, பக். 228

நேசமித்திரன், கார்ட்டூன் பொம்மைகளுக்குக் குரல் கொடுப்பவன் - முதல் பதிப்பு : டிசம்பர் 2010 இல் உயிர்மை பதிப்பகம். சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License